2015 செப்டம்பர் 18]
292—

புறவழிச் சாலை

***32995—டாக்டர் ச. துரையப்பா:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாசுதேவநல்லூர் தொகுதி, புளியங்குடியில் புறவழிச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வாசுதேவநல்லூர் தொகுதி, புளியங்குடியில் புறவழிச் சாலை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ச. துரையப்பா அவர்கள்.

டாக்டர் ச. துரையப்பா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'முடியாது', 'இல்லை' என்பது மாண்புமிகு அம்மா அவர்களின் வரலாற்றிலேயே கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலிக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புளியங்குடியில் புறவழிச் சாலை அமைக்கக் கேட்கப்பட்டுள்ள பகுதியானது, தேசிய நெடுஞ்சாலை எண் 208-ல் கொல்லம், தென்காசி, திருமங்கலம் சாலை கி.மீ. 126/0-லிருந்து 129/0 வரையிலுள்ள மூன்று கிலோ மீட்டர் நீளம் கொண்டது. இப்பகுதியில் 10 மீட்டர் அகலத்திற்கு சாலையினை

அகலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சாலை அகலப்படுத்தப்படுவதால், போக்குவரத்து நெரிசல் குறைக்கப்படும். எனவே, புளியங்குடியில் புறவழிச் சாலை அமைக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ச. துரையப்பா அவர்கள்.*

டாக்டர் ச. துரையப்பா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கனிவான பதிலுக்கு என்னுடைய தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியைக் கூறி அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.*

திரு. மு. திராவிடமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட கூடலூர், ஓவேலி பேரூராட்சிக்குட்பட்ட நெடுஞ்சாலை ஆரூட்டுப்பாறையில் உள்ள பாலம் படுமோசமாக உள்ளது. இதிலுள்ள சாலையும் சரியாக இல்லை. இதைச் சரிசெய்து கொடுக்க வேண்டும் என்று கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைக்கப்பட்டது. மாண்புமிகு அமைச்சர் அவர்களும் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தார்கள். ஆனால், இதுவரைக்கும் எந்த நடவடிக்கையும் இல்லை. மேலும், சீபுரம் முதல் பெரியசோலை வரை உள்ள சாலையும் சரியாக இல்லை. இதையும் சீர்செய்து கொடுப்பதாக உறுதியளித்தார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இவ்வாண்டிலாவது, ஆரூட்டுப்பாறை பாலம் மற்றும் சீபுரம் முதல் பெரியசோலை வரை உள்ள சாலை ஆகிய இரண்டையும் சரிசெய்து கொடுப்பார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விழைகின்றேன்.*

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

2015 செப்டம்பர் 18]

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில் 134.70 கிலோ மீட்டர் நீளச் சாலைகள், ரூ.84.01 கோடி செலவில் கடந்த 4 ஆண்டுக் காலத்தில் அகலப்படுத்தி, மேம்பாடு செய்யப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) நடப்பாண்டில், 2015-2016 ஆம் ஆண்டில், 88.28 கிலோ மீட்டர் நீளச் சாலைகள், ரூ.45.96 கோடி மதிப்பீட்டில் அகலப்படுத்தி, மேம்படுத்தப்பட உள்ளன என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இந்த இரண்டு சாலைகளும் இதில் அடங்கும் என்று நான் கருதுகின்றேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தச் சாலைகள் மோசமாக இருப்பதாகச் சொல்கின்றார்கள். அவருடைய தொகுதியிலே மட்டும் கடந்த நான்காண்டுக் காலத்தில் 134.70 கிலோ மீட்டர் நீளச் சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் 88.28 கிலோ மீட்டர் நீளச் சாலைகள் அகலப்படுத்தப்பட்டு, மேம்படுத்தப்படவுள்ளன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

திரு. இரா. அண்ணாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை, அரசரடி காளவாசலில் ஒரு பாலம், கோரிப்பாளையத்தில் ஒரு பாலம், தெற்குவாசலில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக சிந்தாமணி சாலையில் ஒரு பாலம், குருவிக்காரன் சாலையில் ஒரு பாலம் என நான்கு பாலங்கள் கட்டுவதற்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதற்காக நில ஆர்ஜிதம் செய்யப்பட்டுவிட்டதா? பூர்வாங்கப் பணிகள் துவக்கப்பட்டிருக்கின்றனவா? எப்போது அந்தப் பணிகள் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் தங்கள்மூலம் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை, காளவாசல் சந்திப்பில்

கட்டப்படவுள்ள மேம்பாலத்தை பொறுத்தவரைக்கும், விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. மதுரை, கோரிப்பாளையம் சந்திப்பில் கட்டப்படவுள்ள மேம்பாலத்தைப் பொறுத்தவரைக்கும், விரிவான திட்ட அறிக்கை அடிப்படையில் நில எடுப்புப் பணிக்கு மட்டும் 165 கோடி ரூபாய்க்கான கருத்துரு அரசின் பரிசிலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மதுரை, பெரியார் பேருந்து நிலைய மேம்பாலத்திற்கு, நில எடுப்புப் பணிக்கு மட்டும் 38 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 295, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எல். ஜெயசுதா, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

295—

பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி

***52741—திருமதி எல். ஜெயசுதா:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதியில் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் மொத்தம் 509 பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளைப் பொறுத்தவரையில், 41 கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. அரசு உதவி பெறும் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளைப் பொறுத்தவரையில், 34 கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. சுயநிதி பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் 414 மற்றும் வேளாண்மை, உணவு உற்பத்தி, Hotel Management *போன்ற*